தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, பங்குனி 17, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 மார்ச் 31, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்”

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

துணை மின் நிலையம்

***36204—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடி பகுதியில் 110/33 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடி பகுதியில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் 1X3.15 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் இயங்கி வருகிறது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு, 2X5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளாகத் திறன் உயர்த்த மின் தொடர் அமைப்புக் கழக எண் 871/2014—ல் ரூ.123.99 இலட்சம் செலவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மின்மாற்றிகள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன. மின்மாற்றிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் நிறுவுவதற்கான பணிகள் துவங்கப்பட்டு, இந்த வருடம் மே மாத இறுதிக்குள் சாயல்குடி 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் இயக்கத்தில் உள்ள 1X3.15 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி 2X5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளாகத் திறன் உயர்த்தப்படும். எனவே, முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடி பகுதியில் 110/33 கே.வி. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் பிறப்பிடமாய், ஆற்றலின் உறைவிடமாய், அதர்மத்தை வென்றெடுத்து தர்மத்தை நிலைநிறுத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் அன்புத் தாயே! கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாயல்குடி 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சாரம்மூலம் சுமார் 50 கிராமங்கள் பயனடைந்து வருகின்றன. கிட்டத்தட்ட 50 கி.மீ. தொலைவிலுள்ள கமுதியிலிருந்து கடலாடி

2015 மார்ச் 31]

வழியாக மின்சாரம் வருகிறது. மழைக் காலத்திலும், காற்றடிக்கக்கூடிய காலத்திலும் ஒவ்வொரு நாளும் முழு நேரமும் மின் தடை ஏற்படுகிறது. சாயல்குடி துணை மின் நிலையத்தின்மூலம் பயனடைவோர் சுமார் 50 கிராமங்களுக்கு மேல் இருப்பதால், மின்தடை ஏற்படுகிறது. எனவே, இப்பகுதி மக்களுடைய மின் தேவைக்கு நிரந்தரத் தீர்வு காண, வாலிநோக்கம் கிராமத்திலிருந்து 110 கே.வி. நிலைய மின்சாரத்தைக் கொண்டுவர அங்கிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள மலட்டாறு விளக்கோடு அருகில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க, போதுமான இட வசதிகூட இருக்கிறது. அந்த 110 கே.வி. துணை மின் நிலையத்தின் அருகில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த சாயல்குடி துணை மின் நிலையம் 3.15 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியோடு இப்போது இயங்கி வருகிறது. இப்பொழுதும்கூட அந்தப் பகுதியிலே மின் பளு உச்சத்தேவை 2.8 எம்.வி.ஏ. மட்டும்தான். இப்பொழுது இருக்கின்ற மின் பளுவிற்கு ஏற்ப போதுமான அளவிற்கு இருந்தாலும்கூட, பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்தில் பற்றாக்குறை ஏற்பட்டால், அதற்குப் பின்பு நடவடிக்கை எடுப்பதைக் காட்டிலும், வருமுன் காப்போம் என்ற அளவிலே, பற்றாக்குறை வருவதற்கு முன்பாகவே அந்தப் பகுதியிலே திறன் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து, 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின் மாற்றிகளை நிறுவி, 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரமுயர்த்த, ஏற்கெனவே 123.99 இலட்சம் ரூபாயை மின் வாரியம் வழங்கியிருக்கிறது. 10 எம்.வி.ஏ. திறன்

கொண்ட மின்மாற்றியுடன் தரம் உயர்த்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தற்போது கோரிய தரம் உயர்த்தப்படுவதால், சாயல்குடி துணை மின் நிலையத்தில் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மின்சாரப் பிரச்சினை வராது. எனவே, தேவைக்கு மேல் அங்கு மின் வசதி செய்யப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, 33/11 என்றால் 11-ஐ விட 33 பெரியது, 11-ஐ விட 22 பெரியது, 22-ஐ விட 33 பெரியது, அதேபோல் 110 என்றால் அதையும்விட பெரியது, 230 என்றால் அதைவிட பெரிய மின் நிலையம் என்று தவறாகக் கேட்கின்றார்கள். சிலர் தொழில்நுட்பரீதியாக முழு விவரங்கள் தெரியாததன் காரணமாகக் கேட்கிறார்கள். அந்தப் பகுதியின் மின் தேவைக்கு, குறிப்பாக சாயல்குடிப் பகுதியிலே தற்போது இருக்கின்ற மின் தேவை, 2.8 எம்.வி.ஏ. திறன்தான். ஆனால், 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் அங்கு அமைக்கப்படவிருக்கின்றன. உதாரணத்திற்கு, ஒரு பகுதியிலே, 33/11 கே.வி. திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அதிகபட்சமாக 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளோடு இயங்க முடியும். அவ்வாறு 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுக்கு மேலாக மின் பளு ஏற்படுமேயானால், அப்பொழுதுதான் இந்த 33/11-ஐ, 110/11 அல்லது 33 அல்லது 22 என்று அந்த feeder-க்குத் தகுந்தாற்போல் அவை மாற்றி அமைக்கப்படும். அவ்வாறு 16 எம்.வி.ஏ. திறனுக்கு மேற்பட்ட தேவையிருந்தால்தான் அந்தப் பகுதியில் 110/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, இந்தக் கேள்வியில் தொழில்நுட்பரீதியாக அந்தப் பகுதியில் கூடுதல் மின்மாற்றி கேட்கலாமேதவிர, துணை மின் நிலையம் அமைப்பது குறித்து கேட்பது தவறு. அங்கே இருப்பது 33/11 கே.வி. துணை மின் நிலையம். அந்த 11 என்பது, 11 கே.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியுடன் என்பது அல்ல. மின்னூட்டியின் மூலமாக, wire மூலமாக அங்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

ஏற்கெனவே, அந்தப் பகுதியில் 11 கே.வி. திறன் கொண்ட மின்னூட்டிகள்தான் இருக்கின்றன. புதியதாக 33/11 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்தால், தற்போது

2015 மார்ச் 31]

அங்கிருக்கின்ற வசதியுடன் இது பொருந்தாது. ஆகவே தொழில்நுட்பரீதியாகவும்கூட, அங்கு என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் தரம் உயர்த்த முடியும். ஆகவே, அந்தப் பகுதியிலிருக்கின்ற மின்மாற்றி, இப்பொழுது தரம் உயர்த்தப்படுகின்றபோது, அடுத்த 10 ஆண்டுகளுக்கு மின்சாரப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. அதேபோல், இனி இப்பிரச்சினை குறித்து கேள்விகள் எழுப்புகின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன், 16 எம்.வி.ஏ. திறனுக்குமேல் மின் பளு இருந்தால் மட்டுமே, 33/11-க்குமேல் மின்னழுத்தம் வழங்க தனியாக 110/33 கே.வி. அல்லது 22 கே.வி. அல்லது 11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க முடியும் என்பதால், அதனை அறிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியின் கோரிக்கைகளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே இடம் கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். இடம் கொடுப்பதால் மட்டுமே ஓரிடத்தில் தேவையில்லாமல் துணை மின் நிலையத்தை அமைத்துவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அந்தப் பகுதியில் எதிர்பாராதவிதமாக இன்னும் அதிகமான மின் பளு ஏற்பட்டதால், அப்போது வேண்டுமானால், இப்போது இருக்கின்ற அளவையும் மாற்றி, 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் பளுவிற்கு மேல் தேவை ஏற்பட்டால், அந்தப் பகுதியில் 110/33 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடி பகுதியில் மின்மாற்றி அமைத்துத் தரப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.